DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323/ 2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 7 |
| Name | : சீமைச்சாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2024.

--------

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்போது அம்மமுத்தன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் சரிவர தெரியாது. சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் சுமார் மதியம் 2.00 மணிக்கு நல்லுத்தேவன்பட்டி அய்யன்கோவிலுக்கு பக்கத்தில் நானும், எனது நண்பர் கண்ணனும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அங்கே நின்றுகொண்டிருந்தார். அப்போது போலீசா˙ என்னை அழைத்து விசாரித்தார்கள். அப்போது போலீசார் அவர்களின் குடும்ப பிரச்சினை சம்மந்தமாக விசாரித்தார்கள். என்னையும், எனது நண்பன˙ கண்ணனையும˙ யைழெுத்து போடச்சொன்னார்கள். அதன்பின்பு அதே இடத்தில் பைக்கை போலீசார் எடுத்தார்கள். அந்த பைக்கை கைப்பற்றியதற்காக அத்தாட்சியில் நானும், கண்ணனும்

கையெழுத்து செய்தோம். காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என ் உடன்பிறந்த அண்ணன ் ராஜாஜி ஆவார். அவா ் அ.சா.1ன் கொலுந்தியாளை திருமணம் செய்துள்ளார். சாட்சி கண்ணன் எனது உறவினர் என்றால் சரிதான். அவரும் அ.சா.1ற்கு உறவினா் என்றால் சரிதான். மேற்படி அய்யணார்கோவிலிருந்து தென்மேற்கில் சுமார் 10 கி.மீ தூரத்தில் எழுமலை செல்லும் வழியில ் எனது ஊர் உள்ளது என்றால் சரிதான். கண்ணனின் வீடு அய்யணார்கோவிலிருந்து வடமேற்கே 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.1ற்கு காயம ் ஏற்பட்டதற்கு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேனா என்றால ் இல்லை. அ.சா.1ற்கு பிரச்சினை ஏற்பட்டு காயம ் ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். நான ் மேற்படி கோவிலில ் எதார்த்தமாகத்தான் நின்றுகொண்டிருந்தேன். நான் அந்த இடத்திற்கு இருசக்கர வாகனத்தில்தான் சென்றேன். நான் கோவிலில் வைத்து கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது, யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் இன்ஜீன், சேஸ் எண்கள் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாகனத்தை கோவிலிருந்து யார் எவ்வாறு எடுத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரி சம்பவத்திற்கு முன்பு அ.சா.1ன் மகளை திருமணம் செய்த விவரம் எனக்கு தெரியும். அதுசம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சினை இருந்து வந்த விவரம் எனக்கு தெரியும். நான் அ.சா.1ன் உறவினர் என்பதாலும், பிரச்சனை தெரியும் என்பதாலும் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் மதுரை அரசு

போக்குவரத்து கழகத்தில் திருமங்கலம் டூ தொட்டியப்பட்டி வழிதடத்தில் பணிபுரிந்தேன். போலீசார் என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்களா என்றால் இல்லை. கோவிலில் கையெழுத்து செய்தபிறகு இன்று தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்னது போன்று சொன்ன நேரத்தில், இடத்தில் எந்த விசாரணையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.09.26 16:05:20 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.